பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 07 புதன்கிழமை (21-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174

# வன்னியில் இரு நாள்களாக பெரும் மோதல்கள் இல்லை!

## அரச அதிபருக்கு அனுமதி இல்லை

கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். தில்லை நடராஜா தமது கடமை நிமித்தம் கொழும்பு செல்வதற்காக மடு கோயிலுக்குச் சென்று அங்கிருந்து மடு வீதி வழியாக வவுனியா செல்ல முயற்சித்தார். ஆனால் மடு வீதி சந்தியில் உள்ள படையினர் அவர் தொடர்ந்து செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

## ஆட்லறி வீச்சில் மட்டும் இரு தரப்பும் மும்முரம்

கொழும்பு, மே 21

வன்னியில் படையினர் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ள பிரதேசங்களில் கடந்த இருநாள்களாக பெரும் சண்டை ஏதும் இடம்பெறவில்லை. ஆங்காங்கே சில இடங்களில் சிறு சிறு மோதல்கள் மட்டுமே இடம்பெற்றன.

எனினும் அரசுப் படைகளும் புலிகளும் ஒரு தரப்பு நிலை கொண்டுள்ள பிரதேசம் மீது மறுதரப்பு ஆட்லறி வீச்சுக்களை மேற்கொள்வதில் தொடர்ந்து மும்முரமாக இருப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் தாம் கைப்பற்றிய பிரதேசங்களைப் பலப்படுத்துவதில் தொடர்ந்து அதிக சிரத்தை காட்டி வருகின்றனர். பாதுகாப்பு பங்கர்களை அமைப்பதிலும் அடுத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக் வேளை யுத்தத்தில் மந்தம்

கொழும்பு, மே 21

இன்றும் நாளையும் வரும் வெசாக் கொண்டாட்டங்களையும் மத நிகழ்வுகளையும் ஒட்டி வன்னி இராணுவ நடவடிக்கைப் பிரதேசத்தில் சண்டை மும்முரமாக இருக்காது; மந்தமாகவே இருக்கும் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

''வெசாக் காலத்தில் யுத்த முனையில் மந்த நடவடிக்கைப் போக்கை கடைப்பிடிக்கவே படைத்தரப்பு விரும்பும் என எதிர்பார்க்கலாம்; ஆனால் புலிகள் நினைத்தால் அந்தப் போக்கை மாற்றச் செய்து கடும் சண்டை நிலையை ஏற்படுத்திவிட முடியும்'' — என அந்நிறுவனம் குறிப்பிட்டது.

## 60 போராளிகளே புலிகள் தரப்பில் பலி!

வன்னியில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைக்கு எதிராகத் தாங்கள் நடத்திவரும் பதில் தாக்குதல்களில் தங்கள் தரப்பில் மூன்று லெப்டினன்ட் கேணல்கள், ஆறு மேஜர்கள், ஆறு கப்டன்கள், ஒன்பது லெப்டினன்ட்கள், பத்து இரண்டாவது லெப்டினன்ட்கள் உட்பட அறுபது போராளிகளே உயிரிழந்திருப்பதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

ஆனால் புலிகளுக்குப் பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து அரசுத் தரப்பில் உண்மைக்கு முரணான தகவல்கள், வதந்திகள் வெளியிடப்படுவதாகவும் புலிகள் அறிவித்தனர்.

கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சியில் நடந்த மோதலில் ஐந்து போராளிகள் உயிரிழந்ததாகவும் புலிகள் தெரிவித்தனர்.

(உ-164)

## படைத் தரப்பில் 100 பேர் வரை பலி!

வன்னி இராணுவ நடவடிக்கையின் போது இதுவரை படையினர் தரப்பில் இருநூறு பேர் பலியானதாகவும், 315 பேர் வரை காயமுற்றதாகவும் 'சன்' டி. வி. நேற்று அறிவித்தது.

ஆனால் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை நூறை அண்மித்ததாக இருக்கும் என்றும் —

அறுநூறு பேர் வரை காயமடைந்திருக்கலாம் என்றும் — மற்றொரு செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

தமது இழப்புகள் குறித்து அரசுத் தரப்பு வெளியிடும் செய்திகள் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியது;

## ஷெல் தாக்குதல்

வவுனியா, மே 21

மண்கிண்டிமலை பிரதேசத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் மக்கள் வதியும் இடங்களை நோக்கி நேற்று கடும் ஷெல் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டனர் என்றும் —

இத்தாக்குதல்களில் அமரசிங்கம் என்பவர் உயிரிழந்ததாகவும் —

''புலிகளின் குரல்'' வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-164)

## தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மே 21

வன்னியில் ஆரம்பித்துள்ள படை நடவடிக்கைகளை உடனே நிறுத்தி சமாதானத் தீர்வுக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கும்படி பல தமிழ்க் கட்சிகள் அரசைக் கேட்டிருக்கின்றன. (உ)

## அதிகாரி காயம்

கொழும்பு, மே 21

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் போது 'கெமுனுவாச்' படையணியின் 8 ஆவது பட்டாலியனின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேணல் யூ. டி. சில்வா காயமடைந்திருக்கின்றார்.

இத்தாக்குதலில் இதுவரை அதிகாரி தரத்தில் உள்ள மேஜர் ரி. யு. எல். சில்வா, கப்டன் கே. டபிள்யூ. ஜே. ஜெயவர்த்தன, கப்டன் பி. எல். டி. சில்வா கப்டன் கே. யு. காமினி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

(உ-150-3)

## மதகு தகர்ப்பு

கொழும்பு, மே 21

வெலிஓயா இராணுவ முகாமுக்கு விநியோகத்தை மேற்கொள்வதற்கான பிரதான பாதையான கெப்பிற்றிக்கொலாவ — பதவியா வீதியில் உள்ள மதகு ஒன்றை நேற்று முன்தினம் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்ததாகக் கூறப்படுகின்றது. இதனால் வெலிஓயா முகாமுக்கான விநியோகம் தடைப்பட்டுள்ளது.

தகர்க்கப்பட்ட மதகை திருத்தியமைப்பதில் படையினர் நேற்று தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். (உ-21)

## கைப்பற்றிய இடங்களில் 1,500பேர்

வவுனியா, மே 21

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் கைப்பற்றி உள்ள பகுதிகளுக்குள் ஆயிரத்து 500 பொதுமக்கள் வந்துள்ளனர் என்று வவுனியாவில் [illegible] தெரிவித்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல ஆட்லறிகள் புதிதாகக் களத்துக்கு

வவுனியா, மே 21

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மூலம் படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு நேற்று மேலும் பல ஆட்லறிகள் கொண்டு செல்லப்பட்டதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முதற் கட்டம் எப்போது பூர்த்தி?

### படை அதிகாரி விளக்கம்

கொழும்பு, மே 21

வவுனியாவில் இருந்து ஓமந்தை ஊடாக முன்னேறும் 55 ஆவது படையணியினரும் —

வெலிஓயாவில் இருந்து நெடுங்கேணி ஊடாக முன்னேறும் 53 ஆவது படையணியினரும் —

ஒன்றாக இணையும் போதுதான் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் முதல் கட்டம் பூர்த்தியாகும்.

— பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

முதல் கட்டம் பூர்த்தியானால் அதன் பின்னர் விடுதலைப் புலிகளால் 120 எம். எம். 80 எம். எம். ஆட்லறிகள் மூலமும், மோட்டார்கள் மூலமும் வவுனியா நகர் மீது தாக்குதல் நடத்த முடியாது போய்விடும் என்று மற்றொரு இராணுவ அதிகாரி தெரிவித்தார். (உ-3-150)

## அம்புலன்ஸ்கள் கொழும்பில் ஓட்டம்

கொழும்பு, மே 21

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினரைக் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் பணி 24 மணி நேரமும் மும்முரமாக இடம்பெறுகின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தவில் 4 படையினர் பலி!

கொழும்பு, மே 21

மட்டக்களப்பு — பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசத்தில் உள்ள கடவத்தமடுப் பகுதியில் நேற்றுக் காலை 8-00 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

மேற்படி மகாவலிப் பிரதேசத்தில் விவசாயம் செய்யும் சிங்களக் கிராமவாசிகளுக்குப் பாதுகாப்பு வழங்கச் சென்ற சமயமே இவர்கள் தாக்குதலுக்கு இலக்கானதாக ஒரு செய்தி தெரிவித்தது.

வெலிகந்த — சிங்கபுர — நாகத்தென்ன பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கச் சென்ற இராணுவக் குழு மீது புலிகள் நேற்றுக்காலை மேற்கொண்ட தாக்குதலில் 4 சிப்பாய்கள் உயிரிழந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது தங்கள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் 3 படையினர் பலி!

வவுனியா, மே 21

வவுனியா செட்டிகுளம் பகுதியில் — செட்டிகுளத்துக்கும் பூவரசங்குளத்துக்கும் இடையில் — பூவையாறு என்ற இடத்தில் நேற்று விடுதலைப் புலிகளின் கிளைமோர் கண்ணியில் சிக்கி படையினரின் டிராக்டர் ஒன்று சுக்கு நூறானது. அதில் பயணம் செய்த மூன்று படையினர் உயிரிழந்தனர்.

அப்பிரதேசத்தில் நேற்று மாலை தேடுதல் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ- 4-21)

(உ-4-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை அன்னலட்சுமி

திருநெல்வேலி கிழக்கு சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அன்னலட்சுமி 19-05-97 இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா செல்லம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தையா பொன்னுத்துரையின் (நடத்துநர் முன்னைநாள் இ. போ. ச. யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், சந்தானலட்சுமி, பேபி சறோஜா, சரோஜா, கமலாதேவி, சிறிஸ்கந்தராசா, தேவராசா (ராஜா இறைண்டிங்கில் மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோமசுந்தரம், குருநாதன், குணசீலன், உமாச்சந்திரன், நவீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரன், சதீஸ்வரன், யசோதரன், காலஞ்சென்ற தயாளன்,மைதிலி, பிரதீபன், பிரசாந்தி, சஜீவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20-05-97 நேற்று செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
ராணி வீதி, நல்லூர். பொ ·சிறிஸ்கந்தராசா, பொ. தேவராசா (பிள்ளைகள்)
(47054)

## திருமதி இரத்தினம்மா கந்தசாமி

திருமதி இரத்தினம்மா கந்தசாமி 20-5-97 அன்று அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற பொன்னையா — நாகம்மா தம்பதிகளின் புதல்வியும், ஆறுமுகம் கந்தசாமி (இணுவில், கமலா கைக்கிள் வேக் சொப் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணரத்தினம் (இ போ. ச.), காலஞ்சென்ற சதானந்தம் (வானொலி இயந்திரவியலாளர்) மற்றும் தனபாலசிங்கம், தனபாக்கியம், கமலாவதி, பாலு, கருணாந்தசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனக ராஜேந்திரம் (Lanka Cement Limited), பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-05-97 செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 5.00 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
முகவரி:-
தலைவாசல் சந்தி, சுதுமலை வடக்கு, சுதுமலை. கனக-ராஜேந்திரம் (மருமகன்)
(47066)

## கந்தையா மாசிலாமணி

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து தம்பதிகளின் மகனான கந்தையா மாசிலாமணி ஞாயிறன்று கொழும்பில் காலமானார்.

இவர் சிவசம்பு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சோதீஸ்வரியின் அன்புக் கணவரும், சசிகலா, அமுதகலா (ஜேர்மனி), விவேகானந்தன் (ஜேர்மனி), சந்திரகலா, பத்மகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (தர்சினி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), முருகதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மங்களரூபி, மங்களரூபன், மங்களசோதீசன், மங்களவாணி, கிருஷிகா, வினோத், பிரசாத் ஆகியோரின் அன்புப் பேரனும், சொர்ணலிங்கம், சிவபாக்கியம், சரஸ்வதி, விமலாம்பிகை, தனலட்சுமி, சிவானந்தன், திரவியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி, சுந்தரலிங்கம், சோமசுந்தரம், அருணகிரிநாதன், பராசாசிங்கம், லலிதாம்பாள், ராணி, பாக்கியலட்சுமி, பரமசாமி, பழனிவேல், குணரட்ணம், காலஞ்சென்றவர்களான நடராசா, பத்மநாதன், ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் லீலாவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி, ஜெயலட்சுமி, சிவனேசரத்தினம் ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
இல 68, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். ஆ. சி. பரமசாமி (மைத்துனர்)
(47075)

## குமாருப்பிள்ளை இராசரட்ணம்

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், நல்லூர் அரச அதிபர் பணிமனை)

வியாபாரிமூலை அல்வாயைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகக் கொண்டவருமான குமாருப்பிள்ளை இராசரட்ணம் காலமானார்.

அன்னார் குமாருப்பிள்ளை தங்கமுத்துப்பிள்ளையின் அன்பு மகனும், திருமதி பூரணம் இராசரட்ணத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை,யா/வண்.நாவலர் ம.வி.) அன்புக் கணவரும், வனஜா (ஆசிரியை, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), முருகதாஸ் (முரளி, எக்கவுண்டிங் சிஸ்ரம், பரமேஸ்வரா சந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி வசந்தி முருகதாஸின் அன்பு மாமனாரும், வள்ளிநாயகி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21-05-97) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் (பழைய நேரம்) 375/19, நாவலர் வீதி, ஆனைப்பந்தியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
(47081) திருமதி பூரணம் இராசரட்ணம் (மனைவி)

# வேலிகளுக்கு தீவைப்பு

ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினரால் சில வீடுகளின் வேலிகள் தீயிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-15)

# இன்று

புலோலி வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்தோருக்கு இன்று புதன் கிழமை விசேட அடையாள அட்டை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன சேமிப்புக் கடனுதவி சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன் கிழமை நடைபெறும்.

பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உபஆணையாளர் திரு. எஸ். கே. சண்முகநாதனும், விசேட விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமியும் கலந்து கொள்வார்கள். திரு. அ. துரைசிங்கம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (உ-173)

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஆண்டு 8 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி கருத்தரங்கு இன்று இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். மூன்றாண்டுக் கல்வித் திட்டம், முதலாந் தவணை மதிப்பீடு, விடைத்தாள் பகுப்பாய்வு ஆகியன குறித்து இக் கருத்தரங்கில் கலந்துரையாடப்படும். (உ-152)

★ ★ ★

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் அணித் தலைவர் பயிற்சி இன்றும் நாளையும் காலை 8-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

இன்று வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும், நாளை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும் சாரணர் அறுவர் தலைவர் பயிற்சி நடைபெறும்.

(உ-152)

எமது இன்றைய
புதிய வெளியீடு
கார்த்திக் நடித்த
**பிஸ்தா**
எம்மிடம் மட்டும் தரமான
பிரதிகள்
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(47078)

சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சிக்கன சேமிப்புக் கடனுதவி சங்கம்
## 10 ஆவது ஆண்டு நிறைவுவிழா

இடம்:- மேலைப்புலோலி சதாவதானி அரங்கு
காலம்:- இன்று (21 - 05 - 97) புதன்கிழமை
தலைவர்:- திரு.அ. துரைசிங்கம்
பிரதம விருந்தினர்:- திரு.எஸ்.கே. சண்முகநாதன் (கூட்டுறவு அபிவிருத்தி உப ஆணையாளர்)
விசேட விருந்தினர்:- திரு.ஆ. சிவசுவாமி (பிரதேச செயலர் – பருத்தித்துறை)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையம்
மேலைப்புலோலி, பருத்தித்துறை.
(47082)

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மணிக்கல்வி நிறுவன மாணவன்
சி. கஜகர்ணிகனின் தந்தையார்
**சி. சிவகுமார்**

19-05-97 அன்று காலமானார். அன்னாரின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மணி நிர்வாகியும், ஆண்டு 11 மாணவ, மாணவிகளும்.
(47234)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 03 — 1928
மறைவு: 21 — 04 — 1997

## அமரர் நமசிவாயம் அருணாசலம்

(தாடி மாமா, B. F. O. உத்தியோகஸ்தர்)

அன்பாய் ஆதரவாய் பண்பாய் எமையெல்லாம் வழிநடத்திக் காத்து நின்ற தெய்வமே, திடீரென எமை விட்டு மறைந்தீரே, இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21-05-1997) புதன்கிழமை நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புச் சகோதரிகள், சகோதரர்கள்,
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.
நமசிவாய ஞானகைலை, நீலியம் பனை,
மல்லாகம்.
(47231)



உ
ஓம் சக்தி
விராட் விஸ்வப்பிரம்மனே நம!

# புதுமனைப் பிரவேச விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருஷம் வைகாசி மாதம் 9 ஆம் நாள் (23-05-97) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு பிரதமையுடன் கூடிய கேட்டை நக்ஷத்திர சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## ★ பிரியங்கா இல்லம் ★

என்னும் புதுமனையில் பிரவேசம் செய்வதற்குத் திருவருள் கைகூடி வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் திருவருட் கடாட்சத்தை முன்வைத்துப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து எங்கள் புதுமனையைச் சிறப்பித்து எம்மை மகிழ்வித்து வாழ்த்தியேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!
திரு. ச. சந்திரசேகரமும் (சின்னமணிப் பத்தர்)
பாரியாரும்

635, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

புதுமனை அமைந்திருக்கும் இடம்:- சந்தை வீதி, கொக்குவில் சந்தி.
(இ/754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டாகொங் துறைமுகப் பகுதி சூறாவளியால் பெரும் அழிவு

## 350 பேர் இறந்ததாக ஆரம்ப மதிப்பீடு தெரிவிப்பு

டாக்கா, மே 21

நேற்று முன்தினம் பங்களாதேஷைத் தாக்கிய சூறாவளி காரணமாக 350 க்கு மேற்பட்டோர் இறந்ததாக ஆரம்ப மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே 30 லட்சம் மக்கள் வரை அவர்களது சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு புயல் பாதுகாப்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டதாலேயே இம் முறை உயிராபத்து குறைந்ததாக டாக்காவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் பங்களாதேஷின் கிழக்குக் கரையை சூறாவளி தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷின் மகேஸ்காலி, தெல்மாட்டின் ஆகிய இடங்களில் 100 பேரும்.

ஹொக்பஸார் பகுதியில் 250 பேரும் — இறந்துள்ளார்கள் என சிட்டா கொங்கில் உள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சிட்டா கொங் துறைமுகத்தில் மட்டும் சுமார் 2 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர்,

பட்டகாலி மாவட்டத்தில் கடலுக்குச் சென்ற சுமார் 100 மீனவர்களைக் காணவில்லை என அஞ்சப்படுகிறது,

சூறாவளியால் பயிர்களும், உடைமைகளும் சேதம் அடைந்துள்ளன.

கரையோர மாவட்டங்களுடன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சிட்ட கொங்கிலும், ஹோக் பஸாரிலும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

உதவி மீட்புப் பணியில் இராணுவமும் கடற்படையும் ஈடுபட்டுள்ளன.

இதனிடையே, இந்தச் சூறாவளி நாகாலாந்து மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய இடங்களை நோக்கி நகர்ந்து பலவீனமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

### அ.தி.மு.க விலிருந்து

# திருநாவுக்கரசு நீக்கப்பட்டார்!

சென்னை! மே 21

அனைத்திந்திய அண்ணா தி. மு. க வின் துணைப் பொதுச் செயலாளரான முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக இவர் வெளியேற்றப்பட்டிருப்பதாகவும்—

கட்சிக்குள் போட்டி மனப்பான்மையை அவர் ஊக்குவித்ததாகவும்— அதன் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

எம். ஜி. ஆர். அ. தி. மு. க வின் பொதுச்செயலாளராக இருந்த திருநாவுக்கரசு கடந்த ஆண்டு மே மாதம் நடந்த பொதுத் தேர்தலின் போது தமது கட்சியை அ. அ. தி. மு க வுடன் இணைத்து அதனுடன் ஒன்று சேர்த்தார்.

தம்மை நீக்கும் கட்சித் தலைமையின் நடவடிக்கை அதிர்ச்சியையும், வருத்தத்தையும் ஏற்படுத்துவதாகத் திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

# அனைத்து கட்சிகளும் பங்குபற்றும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துக

## கொங்கோவுக்கு ஐ.நா.செயலர் கொபி அனான் கோரிக்கை

ஐ. நா, மே 21

கொங்கோவில் அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ளும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு கொங்கோவின் புதிய ஆட்சியாளர்களுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் கொபி அனான் அழைப்பு விடுத்துள்ளார்.

அதே சமயம் கொங்கோவில் அதிகார மாற்றக் குழு ஒன்றை கபீலா நேற்று இரவு அறிவிக்க இருந்தார்.

இக் குழுவில் அனைத்துக் கட்சிகளும் பிரதிநிதித்துவம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு உரிய அரசை நிறுவும் ஏற்பாடுகளை கபீலா தலைமையில் இக்குழு கவனிக்கும்.

கபீலாவை லுமும்பாஸியில் சந்தித்து விட்டு திரும்பிய தென் ஆபிரிக்க துணை அதிபர் தாபோ விபெக்கி ஜனநாயக முறைகளுக்கான உறுதி மொழிகளில் இருந்து கபீலா விலகமாட்டார் என நம்பிக்கை வெளியிட்டார்.

கொங்கோவில் தற்போது நிலவி வரும் உறுதியற்ற அரசியல் நிர்வாக சூழ்நிலையானது பழைய பகை உணர்வுகளையும் வஞ்சகங்களையும் வன்முறை வடிவில் தீர்க்கும் தருணமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

முன்னாள் அதிபர் முபுட்டுவின் விசுவாசிகளையும், அவரது இராணுவத்தினரையும் ஒழித்துக் கட்டுவதில் சில

### உலக அரங்கில்

கும்பல்கள் ஈடுபடுகின்றன எனவும் —

சென்ற வார இறுதியில் மட்டுமே சுமார் 200 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது, (இ-3)

### கலவரத்தால் பாதிக்கப்பட்ட

# தென் மாவட்டங்களுக்கு கருணாநிதி சுற்றுப் பயணம்

சென்னை, மே 21

தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இம் மாதம் 29 ஆம் 24 ஆம் திகதிகளில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி விஜயம் செய்கிறார்.

இந்த விஜயத்தின் போது சம்பந்தப்பட்ட சமுதாயத் தலைவர்களை கருணாநிதி சந்திப்பார்.

சாதிக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டின் தென் மாநிலங்களில் இன்னும் பதற்றம் தணியவில்லை.

கடந்த ஞாயிறு இரவு காமராஜர் மாவட்டத்தில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். (இ)

# 80 ஆண்டுகளுக்கு முன் இறந்த கழுதைக்கு வீரப்பதக்கம்!

## ஆஸி. துணைப்பிரதமர் வழங்கினார்

சிட்னி, மே 21

ஆஸ்திரேலியாவில் 80 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த 'மத்தி' என்ற கழுதைக்கு ஆஸ்திரேலிய துணைப்பிரதமர் கிங்பிஷர் வீரப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

முதலாம் உலக மகாயுத்த காலத்தில் காயப்படும் போர் வீரர்களை சுமந்து வருவதற்கு இந்தக் கழுதை பெரும் உதவி செய்ததாகவும்—

சிம்சன் என்ற போர் வீரரே இந்தக் கழுதையைப் பயன்படுத்தி வந்ததாகவும்—

போரின் போது குண்டுபட்டு கழுதையும் சிம்சனும் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் 'மத்தி' என்ற இந்தக் கழுதைக்கு மட்டும் அல்ல போர் வீரரான சிம்சனுக்கும் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. (இ)

### கொங்கோ அரசமைப்பு பேரவைக்கு

# விவசாயி ஒருவரையே முதலில் அழைக்க முடிவு

கின்ஸாசா, மே 21

'கொங்கோ ஜனநாயகக்குடியரசின் அரசியலை, சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து உருவாக்க கபீலா தலைமையிலான புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொங்கோவில் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. இதற்காக அரசமைப்புச் சபை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சபைக்கு ஆலோசனை வழங்க முதலில் அழைக்கப்பட உள்ளவர் ஒரு கிராமத்து விவசாயி ஆவார். (இ)

# பிரெஞ்சுத் தூதரகக் காவலர் மயிரிழையில் உயிர் தப்பினார்

## ஆர்ப்பாட்டக்காரர் தூக்கிலிட முயற்சி

கொங்கோ ஜனநாயகக் குடியரசு என்று புதிய ஆட்சியாளர்களினால் பெயர் சூட்டப்பட்டுள்ள ஸயரின் தலைநகரான கின்ஸாசாவில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் முன்னிலையில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான ஸயரீ நாட்டவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஸயர் உள்நாட்டுப் போரில் முபுட்டுவுக்கு ஆதரவாக பிரான்ஸ் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிரெஞ்சுத் தூதரகத்துக்கு வெளியே நின்ற காவலரை ஆர்ப்பாட்டக்காரர்கள் பிடித்துத் தூக்கிலிட முயன்ற போது படையினரின் தலையீட்டினால் அவர் இறுதி நேரத்தில் காப்பாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஸயரின் கரன்ஸி நோட்டுகளால் முபுட்டுவின் சாயலில் கொடும்பாவி ஒன்றை உருவாக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் இழுத்து வந்தனர். (ஐ)

# மனித உரிமைகளை மதிக்குமாறு கொங்கோவுக்கு அமெ. அறிவுறுத்து

கின்ஸாசா, மே 21

லோறன் கபீலாவின் தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கொங்கோ ஜனநாயகக் குடியரசு ஜனநாயக பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும்—

மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

கொங்கோவில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கின்ஸாசாவில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் முன் இடம் பெற்ற சம்பவம் குறித்து அமெரிக்கா அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# பிரச்சினை நிறைந்த 6 மாநிலங்களில் குஜ்ரால் ஐந்து நாள் பயணம்

## பேச்சுக்கு வருமாறு அசாம் தீவிரவாதிகளுக்கு அழைப்பு

புதுடில்லி, மே 21

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் இந்தியாவின் பிரச்சினைகள் நிறைந்த 6 வடக்கு மாநிலங்களில்



ஐந்து நாள் விஜயம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தமது பயணத்தின் முதல் நாள் அசாம் மாநிலம் சென்ற அவர் நிபந்தனை அற்றவிதத்தில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அசாம் தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வங்காளிகளின் குடியேற்றம் ஆகும்.

வங்காளிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று அசாமில் தீவிரவாதிகள் கோரி வருகின்றனர்.

குஜ்ராலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக தீவிரவாதிகள் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் தேவ கௌடாவும் வடகிழக்கு மாநிலங்களின் பிரச்சினைகளில் அதிக அக்கறை செலுத்திவந்தார். பல கோடி ரூபாய்களைப் பழங்குடி மக்களின் முன்னேற்றத்துக்காக வழங்குவதாக அவர் உறுதி அளித்திருந்தார்.

ஆனால் மத்திய அரசாங்கத்தின் வாக்குறுதிகளும், பழங்குடி மக்களுக்குப் பெரும் அளவு நம்பிக்கையை அளிக்கத் தவறியிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (8-3)

# வெளியுறவு செயலர்

புதுடில்லி, மே 21

இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளராக கே. ரகுநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஓய்வு பெறப் போகும் சல்மான ஹைதருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்படுகிறார்.

மத்திய அரசின் நியமனக் குழு ரகுநாத்தின் பெயரை ஆமோதித்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் கஜகர்ணீகன்
அவர்களின் பாசமித தந்தையார்
**சிவதாசர் சிவகுமார்**
அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆண்டு 11'F' மாணவர்கள்
யாழ்/. இந்துக்கல்லூரி.

(470 65)

---

விடுதலை விடுதலை விடுதலை
நோயிலிருந்து விடுதலை
பேயிலிருந்து விடுதலை
பாவத்திலிருந்து விடுதலை
சாபத்திலிருந்து விடுதலை
இயேசு தருகின்றார்
**சுவிஷேசக் கூட்டங்கள்**

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 22 - 05 - 97, 23 - 05 - 97
நேரம்: மாலை 3 மணி (புதிய நேரம்)

செய்தி அளிப்பவர்:
போதகர்: **யோண் அன்ரனி**
திருகோணமலை

வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப்படும்
அனைவரும் வருக. (47033)

---

# அஞ்சலி

திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
வைகாசி விசாகப் பொங்கல்
நாயக வளந்தெடுத்தலை
150 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்த
திருநெல்வேலி கிழக்கு
சமரபாகுதேவன் வளவு
"கல்வீட்டார்" நாகப்பர் வைத்திலிங்கம்
அவர்களின் பேரனும்
நாயக வளந்தின் நான்காம் உரிமைக்காரருமான

அமரர்
**வேலுப்பிள்ளை சின்னராசா**
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்மன் திருவருளை வேண்டுகின்றோம்!

வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை
சந்தையா
முதலாம் உரிமைக்காரர்

(46969)

---

## பூபாள ராகங்கள் நாளை

வடமராட்சி கம்பர் மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு பின் ஒத்தி வைக்கப்பட்ட பூபாள ராகங்கள் கலை நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அதிபர் திரு. மு. அனந்தேஸ்வரன் தலைமையில் பாடசாலை அரங்கத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயம்—2கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி திரு வ. செல்வராசா, ஷ பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் திரு. இ. கந்தசாமி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்வுகளில் விஷேட நிகழ்வாக "சமூகவாழ்வியலில் பெரிதும் மேம்பாட்டை ஏற்படுத்துவது காதல் திருமணங்களா? பெற்றோர் நிச்சயிக்கும் திருமணங்களா?' என்பது குறித்த பட்டிமன்றம் இடம்பெறும். மற்றும் நாட்டியக் கலையரங்கம், கானமழை, நாடகம், ஈழ நல்லூர் அருணாவின் இன்னிசை விருந்து போன்ற கலைநிகழ்வுகளும் நடைபெறவிருக்கின்றன.

பாடசாலை அபிவிருத்திக்கு நிதி திரட்டுவதற்காகவே இக் கலை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பழைய மாணவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஈ)

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், மே 21

திருகோணமலையில் இருந்து நேற்று காங்கேசன்துறை வந்து சேர்ந்த 'சஜிந்த' கப்பலில் குடாநாட்டுக்கான 21 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

## வைகாசி பெரு விழா

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த வைகாசிப் பெருவிழா இன்று புதன் கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். (இ 4)

---

# தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான விற்பனை நிலையத்திற்குக் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஊழியர்கள் தேவை

1) Bill Clerk - விற்பனை இலிகிதர் (ஆண்கள் மட்டும்)
2) Stock Clerk - பதிவேட்டாளர் (இருபாலாரும்)

மேற் சொல்லப்பட்ட பதவிகளுக்கு, ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த, அனுபவமுள்ள, A/L படித்த 20–40 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

20—30 வயதுக்கு உட்பட்ட சிப்பந்திகளும் (சிற்றூழியர்கள்) தேவை.

**30-05-97** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:- 615,
மே/பா உதயன்
யாழ்ப்பாணம்.

(47060)

---

# கம்பன் சனசமூக நிலையம்

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

**பிற்போடப்பட்டுள்ளது**

மேற்படி சனசமூக நிலையத்தில் இன்று (21-05-97) நிகழவிருந்த கட்டட நிதிக்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 20 - 06 - 97 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர்

(47063)

---

# ஆர். வி. ஜி. (R. V. G.) பீடிகள் விசேட அறிவித்தல்

நாட்டின் சூழ்நிலை காரணமாக எமது ஆர். வி. ஜி. கொழும்பு பீடியைப்போல் போலி R. V. G. பீடிகளைத்தயாரித்து ½ பண்டல் (20 கட்டு) பீடியைக் கட்டையானதாகவும், பச்சைநூல் கொண்டதாகவும், பண்டல் லேபல், கட்டு லேபல், ஒட்டப்பட்டு எமது பீடி என விநியோகம் செய்து வருவதாக அறிகிறோம். எனவே R. V G. பீடி பாவிக்கும் அன்பர்கள், விற்பனையாளர்கள், பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அசல் R. V G. பீடிதானா? என்று பார்த்து வாங்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

"போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்"

ஆர். வி. ஜி. பீடி - நிர்வாகம்,
இல. 58, குறுக்குத்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்.

(47061)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 18 – 12 – 1989

இறைவன் அடியில்: 21 – 04 – 1997

## செல்வி நிஷாந்தினி கந்தசாமி

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆண்டு-3 மாணவி)

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
சென்று விட்டாயே அம்மா!
எங்கள் அன்புச் செல்வமே - நீ
தெய்வமாகி விட்டாய் உன்!
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (47067)

---

உ

# விவாஹ சோபன அழைப்பு

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் வைகாசி மாதம் 8 ஆம் திகதி (22-05-1997) வியாழக்கிழமை காலை 9. 44 மணி முதல் 10. 48 மணி வரையுமுள்ள (பழைய நேரம்) கடகலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் சிரேஷ்ட குமாரி
திருநிறை செல்வி
**சிவச்செல்வியை**

எங்கள் கனிஷ்ட குமாரன்
திருநிறை செல்வன்
**ரங்கநாதசர்மா**
(வேலைப்பகுதி யா/மாநகரசபை)
அவர்களுக்கு

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய, இறையருளுடன், பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, மேற்படி சுபமுகூர்த்தம் 'பாக்கியலெட்சுமி வாசம்', இலங்கை நாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காடு இல்லத்தில் நிறைவுற திருவருள் கூடியுள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ வை. ஜெகதீஸ்வரக் குருக்கள்
ஜெயகௌரி தம்பதிகள்
'வேதாரண்யம்'
சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

பிரம்மஸ்ரீ பு. சதாசிவக்குருக்கள்
(திருநெல்வேலி, ஸ்ரீ காயாரோகண சுவாமி [சிவன்] தேவஸ்தானம்)
"பாக்கியலெட்சுமி வாசம்"
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(47059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் சிமெந்து ஆலையை இயக்குவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 21

காங்கேசன் துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் சிமெந்து ஆலை, சிமெந்து அடைக்கும் பகுதி ஆகியவற்றை முதற் கட்டமாகச் செயற்படுத்துவது குறித்து கொழும்பு உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தின்சிமெந்து ஆலையில் உள்ள 10 ஆயிரம் தொன் கிளிங்கருடன், வெளிநாட்டில் இருந்து ஒருதொகை கிளிங்கரை இறக்குமதி செய்து சிமெந்தை உற்பத்தி செய்வது குறித்து ஆராயப்பட்டுவருகிறது.

பெருந்தொகைச் செலவில் அத்தொழிற்சாலையை புனர்நிர்மாணம் செய்வதை நிறுத்தி விட்டு குறைந்த செலவில் முதற் கட்டமாக அத்தொழிற்சாலையை இயக்குவது தொடர்பாக உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்குத் தேவையான சிமெந்தை உற்பத்தி செய்து புனர்வாழ்வுப் பணிகளுக்கு வழங்கும் வகையிலேயே இந்த ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## வெசாக் தினத்தையொட்டி விசேட தபால் விநியோகம்

வெசாக் தினத்தையொட்டி இன்று குடாநாட்டில் விசேட தபால் விநியோகம் இடம்பெறவிருப்பதாக யாழ். பிரதம தபாலக அதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக வெசாக் தின தபால் விநியோகம் இங்கு இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## அம்பனில் 4 கட்ட சிரமதானப் பணி

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும், பருத்தித்துறை பிரதேசசபை குடத்தனை உப அலுவலகமும் இணைந்து அம்பன் கிராமிய அரசினர் வைத்தியசாலையில் தொடர் சிரமதானப் பணியை மேற்கொண்டுள்ளன.

நான்கு கட்டங்களாக நடைபெற்று வரும் இச்சிரமதானப்பணியின் முதலாவது கட்டத்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் இ. சிவபுண்ணியம் ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச செயலக ஊழியர்களும் கிராம சேவை அலுவலர்களும் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இரண்டாம் கட்ட சிரமதானப்பணியை குடத்தனை உப அலுவலக நூலகர் என். பத்மநாதன் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து குடத்தனை உப அலுவலக ஊழியர்களும் நாகர்கோயில் தெற்கு பொதுமக்களும் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

இச்சிரமதானப்பணியின் போது அம்பன் கிராமிய அரசினர் வைத்தியசாலை சுற்றாடலில் உள்ள பற்றைகள், புற்கள் என்பன வெட்டப்பட்டு துப்புரவாக்கப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலைக்கும் பிரதான வீதிக்கும் இடையில் உள்ள வெள்ளவாய்க்காலும் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது.

அடுத்த இருகட்ட சிரமதானப்பணிகள் இவ்வாரத்தில் மேற்கொள்ளப்படும் என வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலர் உதயனுக்கு தெரிவித்தார். (ஐ-173)

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், மே 21

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில் சிவகாமி அம்மன் பக்திப் பாமாலை இரண்டாவது ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை நண்பகல் 12மணிக்கு திருக்கோயில் முன்றலில் நடைபெறும். [இ-4]

## தபாற்பெட்டி

யாழ்ப்பாணம், மே 21

பொதுமக்கள் நன்மைகருதி தபாற்பெட்டி ஒன்றுசாவகச்சேரி ஜே.எஸ்.ரி. கோட்டடி கடைக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது.

தினமும் நண்பகல்12.00 மணிக்கு தபாற் கந்தோர் ஊழியர்களால் தபால்கள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# ஐ. நா. தூதரக உதவியுடன் முகமாலையில் அபிவிருத்திகள்

தென்மராட்சி, மே 21

பளை முகமாலை கிராம அலுவலர் பிரிவில் பளை பிரதேச செயலகம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவை 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவுள்ளன.

காரைக் காட்டு வாய்க்கால் திருத்த வேலைக்கு ரூபா ஒரு லட்சமும் —

அம்பளாவளை புட்டுவக்கேணி குளம் புனரமைப்புக்கு ரூபா 30 ஆயிரமும் —

முகமாலையில் குழாய்க் கிணறு அமைக்க ரூபா 65 ஆயிரமும் பளைப் பிரதேச செயலகத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முகமாலையில் பாலர் பாடசாலை நிர்மாணிக்க ரூபா ஒரு லட்சமும் பொது மலகூடம் அமைக்க ரூபா 80 ஆயிரமும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி வேலைகள் இப்பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## பிரிவுபசாரம்

திருநெல்வேலி, மே 21

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பணிமனையில் கடமையாற்றி இடமாற்றத்தில் சென்றுள்ள கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர்கள் உட்பட 24 பேருக்கு பிரதேச செயலர் பணிமனை நலன்புரிச் சங்கத்தினால் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பிரிவுபசார வைபவம் நடத்தப்படவுள்ளது. (இ-135)


யாழ். லயன்ஸ் கழகம்

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

இன்று 21 - 05 - 1997 இல் நடைபெறவிருந்த எமது அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நன்றி!

தலைவர்.

(சி/753)



எம். ஐ. எம். சிற்றிக் ரான்ஸ்போட்

சொகுசு போக்குவரத்து

யாழ்ப்பாணம் - திருமலை செல்லும் கப்பற் பயணிகளுக்கு

திருமலையிலிருந்து சொகுசு பிரயாண வசதி செய்யப்பட்டுள்ளது. திருமலை இறங்குதுறையில் இருந்து கொழும்பு மற்றும் ஏனைய இடங்களிலும் உள்ள விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ஒருவருக்கு ரூபா 550/- மட்டுமே அறவிடப்படும்

திருமலை இறங்கு துறையில் வாகனம் தயார் நிலையில் இருக்கும்.

வாகன இல. 58 - 7988

எம். ஐ. எம். சிற்றிக் ரான்ஸ்போட்

திருமலை காமர் றோட்,

திருமலை. (47068)


# உலகமுய்ய முருகன் உதித்த வைகாசி விசாகத் திருநாள் இன்று

நட்சத்திர விரதங்களுள் மிகச் சிறந்த விரதம் 'வைகாசி விசாகம்' ஆகும். 'கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய' என்கிறது கந்தபுராணம். முருகப்பெருமான் உதித்த பெருநாளே வைகாசி மாத விசாக நட்சத்திரத் தினம். வைகாசியின் திவ்விய திருநாளாக விளங்குவது விசாகமே.

கலியுகத்திற்குக் ''கந்தப் பெருமானே சிறந்த கண் கண்ட தெய்வம்'' என்று புராணங்கள் கூறுகின்றன. அதர்மம் தலையோங்க விடாது தடுத்து, தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டே முருகன் உதித்தான். உலகம் உய்யும் வண்ணம் சிவனின் பேரருட் திறத்தினால் வந்து தோன்றியவன் ஆறுமுகன். அசுரத்தன்மை என்ற தீயவினை அகற்றி, நல்வினை அருளும் அருட் பேற்றினன் அவன். கந்தனைக் கரங்குவித்து வணங்குபவர்களுக்குக் கலியின் கொடுமையும், யமபயமும் கிடையாது. ''கந்தனைப் போற்றுவோர் மேல் காலனும் அணுகொணாதே'' என்று பழநி ஸ்தலபுராணம் கூறுகிறது. ''கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் குமரன்'' கந்தன் அல்லவா?

கார்த்திகேயனுக்கு உரிய விசேட தினங்களில் ஒன்றாகிய வைகாசி விசாக தினத்திலே முருகன் ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும், இத்தினத்திலே முருகனை வழிபட்டால் மட்டும் போதாது. முருகனின் சிறப்பு, அவன் அதர்மத்தை ஒழித்த பண்பு, அதன் மகத்துவம், கந்தன் பிறப்பின் தத்துவம் முதலியவற்றை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



அபயக்கரம் காட்டி மக்களைக் காக்கும் ஆறுமுகனின் அற்புதச் சக்தியை இன்றைய தினத்தில் நாம் உணர்வதே தெய்வீகமாகும். ஆலயம் செல்வது, வழிபாடு செய்வது மட்டும் நல்வினை பயந்துவிடாது. உள்ளம் கசிந்து, உடல் நெக்குருகி, ஞானப்பிழம்பான முருகனைத் துதிப்பதோடு, மனதை அவன் மயப்படுத்தி நல்வினையைநாட வேண்டும். எம்மனதிலுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் போன்ற தீயவற்றை ஒதுக்கி நல்லவற்றை நாட வேண்டும்.

### யமனின் தினமுமாகும்

சில இடங்களில் வைகாசி விசாகத்தை யமதர்மராஜனின் தினமாகக் கொண்டாடும் வழக்கமும் உண்டு. யமனின் கணக்கப்பிள்ளையாகிய சித்திரகுப்தனை சித்திரையில் வழிபட்டு விட்டு வைகாசி விசாகத்தில் யமதர்மராஜனை வழிபட்டு நரக பயத்திலிருந்து மீட்சி பெற வேண்டுமென்பது ஐதீகம்.

இந்தத்தினத்தை வெசாக் என்று பௌத்த மதத்தவரும் கொண்டாடுவார்கள். இந்து சமயம் தந்த புரட்சிக் குழந்தையே பௌத்த மதமாகும். வாழ்வில் நேர்மையான பாதை எதுவெனக் காண்பிப்பதற்கும். தீயனவற்றைகளை நாசஞ் செய்வதற்கும் துன்பங்களை ஒழிப்பதற்குமே புத்த பிரான் இவ்வுலகில் அவதாரஞ் செய்தார். அவர் அவதாரஞ் செய்த தினமும் வெள்ளரசு மரத்தின் கீழ் தியானம் இருந்து ஞானம் பெற்ற நற்றினமும் வைகாசி விசாக தினமாகையால் பௌத்தர்களும்இத்தினத்தை புனித நாளாகக் கருதி வழிபாடுகளில் ஈடுபடுவார்கள்.

வைஷ்ணவர்களும் இத்திருநாளைக் கொண்டாடுகிறார்கள். மெய்யன்புடன் விஷ்ணு பெருமானின் புகழ் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவருள் முதல்வரான நம்மாழ்வார் அவதரித்த தினம் இது என்பதால் வைஷ்ணவர்களும் இத்தினத்தை விசேட தினமாகக் கருதுவார்கள்.

பலருக்கும் சிறப்புத் திருநாளான வைகாசி விசாகத்தில் நாமும் பூரண வாழ்வைப் பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக. தெய்வபக்தி என்னும் அகவாழ்வும், மற்றவர்களுக்குத் தொண்டு செய்வது என்னும் புறவாழ்வும் இணைந்ததே பூரண வாழ்க்கையாகும் இத்தகைய பூரண வாழ்க்கையை நாம் வாழ்ந்து பார்க்கவேண்டுமென திருநாளாகிய வைகாசி விசாகத்தில் சங்கற்பம் செய்வோமாக.

★

- சமூகஜோதி கா. கணேசதாசன்


32 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25 – 01 – 1935

மறைவு: 20 – 04 – 1997

அமரர் தம்பிப்பிள்ளை கதிரமலை

(மலையர்)

திதி: 20 - 05 - 1997

எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

காளி கோயிலடி, மல்லாகம்.

(சி/751)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வயலின் (செக்கோசெல வாக்கியா), கொங்கோட்றம் (றிபிள்) என்பன உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. ஸ்ரீ, 186/10, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [47048]

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமிகோயில், யாழ் மாநகரசபை, கல்விக் கந்தோர், யாழ் அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள நல்ல குடிதண்ணீர், பலன் தரும் மரங்கள், மின்சாரம் ஆகிய வசதிகளுடன் விசாலமான அறைகள் உடைய கவர்ச்சிகரமான வீடு உடன் விற்பனைக்குண்டு. இ. இரத்தினதுரை 29, நாயன்மார் வீதி, நல்லூர். [47056]

### தவறிவிட்டது

சங்குவேலி தெற்கில் வசிக்கும் சின்னையா செல்வராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 14-05-97 அன்று சித்தன் கேணிக்கும், மாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து க. துரைசிங்கம், வர்த்தக வங்கிக் கிளை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [47041]

வே, ஞானகாந்தன் என்ற பெயருடைய 570042858V இலக்க அடையாள அட்டையுடன் விசேட அலுவலக அட்டைகளும் திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 110/5, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். [47045]

### புறோயிலர்

புறோயிலா இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு, இல.153, நாவலர் வீதி, மனோகரா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [47042]

### மாறிய சைக்கிள்

யாழ். ஆஸ்பத்திரி வீதி, பூபாலசிங்கம் கடையருகில் 55593755 இலக்க லுமாலா சைக்கிள் தவறுதலாகக் கைமாறிவிட்டது. அதனை திரும்பத் தந்து தமது சைக்கிளை பெற்றுக்கொள்ளவும். க. கெங்காதரன்- பூபாலசிங்கம் புத்தகசாலை. [47058]

---

**G. A. Q. கலை**

முதற்தேர்வு

'98 - வெளிவாரி

யாழ். பல்கலைக்கழகம்

விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகியுள்ளன.

**தமிழ்:-**

மாவை. S. நவரத்தினம் M A.

**SHAMROCK**

யா / ஈச்சமோட்டை வீதி,

(47050)

---

அல்வாய்

## வேவிலந்தை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக தினத்தில் புதிய சப்பற சகடை வெள்ளோட்டம்

**காலம்:- 22-05-97 வியாழன் பிற்பகல் 4 00 மணி**

பகல் அம்பாளுக்கு சங்காபிஷேக பூஜை ஆராதனைகளுடன் பிற்பகல் வெள்ளோட்டம் நடைபெற்று, விநாயகர், அம்பாள், சுப்பிரமணியர் வீதி உலா வரும் அலங்காரக் காட்சியும் நடைபெறும்.

அனைவரும் வருக.

திரு. சி. கணேசமூர்த்தி குடும்பத்தினர்

(47227) ஷெ வெள்ளோட்ட விழா உபயகாரர்,

---

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் வைகாசித் திங்கள் 8 ஆம் நாள் (22 — 05 — 1997) வியாழக் கிழமை காலை 10 00 மணி தொடக்கம் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது செல்வப் புதல்வி

**செல்வி லொறண்டா ஜெயந்தி**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்த இறையருள் கூடியுள்ளமையால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து எங்கள் செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நல்வரவை நாடும்!

திருமதி மேரி அஞ்சலீனா அருளப்பன்,
(தாயார்)

அ. யூட்சன் அன்ரனி,
(சகோதரன்)
(Dr, சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.)

தற்போதைய முகவரி:
181, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (47053)

---

## மீண்டும் இசை வகுப்பு

வயலின், மிருதங்க வகுப்புகள் மீண்டும் ஆரம்பம்: 22 - 05 - 97 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு

தொடர்பு:

**அ. ஜெயராமன்.**

'ஸ்ரீ ரகு ராம ஜெயம்'
2, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

(47069)

---

நவிண்டில், குலனையம்பதி

அருள்மிகு

## குலனை விநாயகர் திருக்கோயில் வருடாந்த பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

**ஈசுர வருடம் 1997**

மேற்படி தேவஸ்தானத்தில் கடந்த **13 - 05 - 97** செவ்வாய்க்கிழமை முதல் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருகிறது:

**21 - 05 - 97** புதன்கிழமை காலை 9: 30 மணிக்கு
தேர் உற்சவம்

**22 - 05 - 97** வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு
தீர்த்த உற்சவம்

**23 - 05 - 97** வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தி

அனைவரும் வந்து தரிசித்து விநாயகர் திருவருள் பெறுவீர்காள்!

மகோற்சவகுரு:
கிரியாபக்திமணி, கானப்பிரியன், சிவாகமகிரியா தத்துவநிதி
பிரம்மஸ்ரீ-தானு-வாசுதேவக்குருக்கள்

ஆலய பிரதமகுரு:
பிரம்மஸ்ரீ-ந. சுந்தரேஸ்வர சர்மா

விநாயகர் அருள் வழிநடக்கும்
**பரிபாலனசபை:**

(47047)

---

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



**செல்வி நர்மதா கனகரட்ணராஜா**

(நடன ஆசிரியை,
யா/மானிப்பாய் மெமோறியல்ஆங்கில பாடசாலை)

| | |
|---|---|
| வையத்துள் அறிமுகம்: | தெய்வத்துள் சங்கமம்: |
| 26 — 03 — 1964 | 07 — 06 — 1990 |

**திதி: 21 - 05 - 1997**

என் அன்பு மகளே!
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லையம்மா உன் நினைவுகள்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அம்மா, உறவினர்கள்.

சந்தையடி,
மானிப்பாய். (47039)

---

## தேரேறும் சிவகாமசுந்தரிக்கு

தில்லை நடராஜரின் நாயகியே
தில்லையம்பதி வாழ் சிவகாமியே
எல்லையில்லா உன்திருக் காட்சியே
எம்மை எல்லாம் மகிழ்விக்குதே
சரணம் அம்மா! சரணம்

தொல்லைகள் அறுத்திட இங்கு
தொழுதடியார் வந்தனரே இங்கு
அல்லல்கள் நீங்கிட இங்கு
அம்மையேயருள் கொடுத்திடு இங்கு
சரணம் அம்மா! சரணம்

ஓடிவரும் அடியவரிக்கு
நாடி அருள் கொடுப்பவளே
கூடி உனைப் போற்றிப்
பாடித் துதி செய்திடுவோம்
சரணம் அம்மா! சரணம்

எம். சுயர்சன்
(47052) சென். பற்றிக்ஸ் கல்லூரி.

---

கோண்டாவில் தில்லையம் பதியில்

இன்று

# தேர்த்திருவிழா

## மேல் நிலை அருள்வாள் சக்தி!



அன்னை பராசக்தி ஓம் சக்தி ஓம்
ஆதி சிவ சக்தி ஓம் சக்தி ஓம்
இம்மை நலம் தந்தாள் ஓம் சக்தி ஓம்
ஈந்தவருக்கு அருள்வாள் ஓம் சக்தி ஓம்
உமையவள் திரிசூலி ஓம் சக்தி ஓம்
ஊழித்தவக்காளி ஓம் சக்தி ஓம்
எம்மையும் ஆட்கொண்டாள் ஓம் சக்தி ஓம்
ஏற்றங்கள் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
ஐசுவரிய பூரணி ஓம் சக்தி ஓம்
ஒருமையில் ஓங்கும் ஓம் சக்தி ஓம்
ஓங்காரி வைரவி ஓம் சக்தி ஓம்
ஔவியம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
ஆனந்தம் சேர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பர்வதக்குமரி ஓம் சக்தி ஓம்
பார்வையில் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
சிவகாமித்தாயே ஓம் சக்தி ஓம்
மேல் நிலை அருள்வாள் ஓம் சக்தி ஓம்

ஆக்கம்:- **கலைமாமணி**
ரி. எம். சௌந்தரராஜன் - தென் இந்தியா

அருள்மிகு
ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
பரிபாலன சபை
(47036)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீராத வியாதியா?

**1990** ஆம் ஆண்டில் போர் தீவிரமடைந்ததிலிருந்து, பாதுகாப்புச் செலவினங்களுக்கென வருடாந்தம் வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியை விட மேலதிக நிதி ஒதுக்கப்படுவது இலங்கையில் வழமையாகி விட்டது.

வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது திட்டமிடப்படுவதை விட, நடைமுறையில் பாதுகாப்புச் செயற்பாடுகளின் அதிகரிப்பும், போரைத் தொடருவதற்குத் தேவையான ஆயுத தளபாடங்கள் மற்றும் கொள்வனவும், ஆளணி திரட்டலும் மேலதிக செலவை உண்டாக்குகின்றன. அதாவது போர் தீவிரமாக்கப்படுவதால் பாதுகாப்புச் செலவு உயர்ந்து கொண்டே செல்கிறது.

1997 ஆம் ஆண்டுக்கென பாதுகாப்புச் செலவுக்கு 4, 800 கோடி ருபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நாட்டின் மொத்தச் செலவில் 20 சத விதம். ஆனால் இப்போது தொடங்கியுள்ள வன்னிப் பெரும் போரை நோக்கும் போது மேலும் 2, 000 கோடி ருபா மேலதிகமாகத் தேவைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வழமை போல நாடாளுமன்றத்தில் குறை நிரப்புப் பிரேரணை கொண்டு வந்து நிதி திரட்டாமல் பாதுகாப்பு நிதிப்பணத்தில் இருந்து மேலதிகத் தேவையைப் பெறப் போவதாக பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார். குறைநிரப்புப் பிரேரணை கொண்டு வந்தால் மேலதிக செலவு வெட்ட வெளிச்சமாகி விடும் என்ற பயமோ, என்னவோ! எப்படி, எந்த வடிவில் எடுத்தாலும் கறக்கப்படுவது மக்களின் பணம் தானே. பெட்டியில் இருந்து எடுத்தாலும் முடிச்சில் இருந்து எடுத்தாலும் ஒன்று தான்!

ஐக்கிய தேசியக் கட்சி அரசு போரைத் தொடர்ந்த போது, அதனைக் கண்டித்தவர்கள் இப்போதைய ஆட்சியாளர்கள்; அர்த்தமற்ற போர் என்று வர்ணித்தவர்கள்; இவர்கள் ஏழைச் சிங்கள இளைஞர்களை போரில் ஈடுபடுத்திக் கொல்வதாகக் குற்றஞ்சாட்டியவர்கள்; அதனால் போரைக் கைவிட்டு சமாதான நடவடிக்கைகள் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக உறுதி அளித்தவர்கள்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து மூன்று வருடங்களாகின்றன. ஆனால் போர் நிறுத்தப்படவும் இல்லை; சமாதானத்துக்கான உருப்படியான உகந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவும் இல்லை. எல்லாம் வெறும் வாய்ப் பேச்சளவிலேயே நிற்கின்றன.

போருக்குச் செலவாகும் பணத்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்கள் நலத் திட்டங்களுக்கும், இளைஞருக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கும் பயன்படுத்தப் போவதாகக் கூறிய இன்றைய ஆட்சியாளர், போருக்காக நாட்டின் செல்வத்தை பாழாக்குகிறார்கள்; பொருளாதாரத்தை சீரழிக்கிறார்கள்.

நாட்டு மக்களின் நிலை இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்றாகிவிட்டது; இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் எவராக இருந்தாலும் அவர்களுக்குப் போர் மயக்கம் வருவது குணப்படுத்த முடியாத வியாதியாகி விட்டதே!

## சமய சந்நிதிகளில்

இன்று வைகாசி விசாகப் பெருநாளாகும் முருகன் ஆலயங்களில் விசேட அபிஷேகங்களும் பூசைகளும் நடைபெறும். பல ஆலயங்களில் முருகன் வீதி உலா வருவார்.

இன்று பூரணை தினமாதலால் ஆலயங்களில் திருவிளக்குப் பூசை, பொங்கல் திருவிழா என்பனவும் நடைபெறும். (அ)

கல்வியங்காடு வீரபத்திரர் கோயில் வைகாசி விசாக உற்சவம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி சங்காபிஷேகம், சண்முகா அர்ச்சனை, அன்னதானம் ஆகியவை நடைபெறும்.

மாலை 4.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, வள்ளி தெய்வயானை சமேத சண்முகப்பெருமான் திருவூஞ்சலைத் தொடர்ந்து வெளி வீதி வலமும் இடம்பெறும். (இ-4)

★ ★ ★

கச்சேரியடி கற்பக விநாயகர் ஆலய தேர் உற்சவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். நாளை 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நண்டிகையில் விநாயகப்பெருமான்வீதியுலா வருவார்.

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் இரதோற்சவம் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து 10.30 மணியளவில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் காலை 10.30 மணியளவில் எஸ். பத்மலிங்கத்தின் தெய்வீக இசையரங்கு இடம்பெறும். (இ-4)

★ ★ ★

சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் கோயிலின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இதேவேளை நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (இ-4)

★ ★ ★

கோண்டாவில்-தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும்.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய இரதோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். (இ-135)

★ ★ ★

உரும்பிராய் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசையை அடுத்து அம்பிகை தேரில் ஆரோகணம் செய்வார். மறு நாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார்ஆலயதேர்த் திருவிழா இன்று பகல் நடைபெற உள்ளது. தீர்த்தத் திருவிழா நாளை இடம் பெறும். (அ-152)

★ ★ ★

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்றும் தீர்த்த திருவிழா நாளையும் நடைபெறும். (அ-152)

★ ★ ★

வல்வெட்டித்துறை வயலூர் முருகன் ஆலயத்தில் வைகாசி விசாக விசேடபூசை இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (அ)

★ ★ ★

சாவகச்சேரி சப்பாச்சிமாவடி விநாயகர் ஆலயம், அனலைதீவு எழுமங்கை மனோன்மணி அம்பாள் ஆலயம், சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் ரதோற்சவங்கள் இன்று காலை இடம் பெறும். (உ-117)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகா கும்பாபிஷேக தின மகா சங்காபிஷேகமும் இளைஞர் விழாவும் நாளை நடைபெறும். (உ-173)

★ ★ ★

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் யாழ். கந்தர் மடம் ஆத்திசூடி வீதி அருள் மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை காலை 8.00மணி முதல் பன்னிரு திருமுறை பூசை நடத்தவுள்ளனர். தேவார இசைமணி இ. திருஞானசம்பந்தன் பண்ணிசை பாடுவார். (உ)

## முடிவுகள் வெளியாகின

கடந்த டிசம்பரில் நடந்த ஜி சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சையின் முடிவுகள் நேற்று கொழும்பில் வெளியாகின. (உ-5)

## 5 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம். மே 21

மானிப்பாய், சுதுமலை, கொக்குவில்— ஆனைக்கோட்டைப் பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமிரவும் இடம் பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்ததாகக் கூறப்படும் ஐவரின் சடலங்கள் நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

ஆனைக்கோட்டைப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட மூவரின் சடலங்களில் ஒன்று நேற்று உறவினர்களால்அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை குஞ்சுமதவடியைச் சேர்ந்த கதிரவேலு சுரேசன் (வயது 33) என்பவரின் சடலமே அது.

இச்சம்பவத்தில் காயமுற்ற அவரது மனைவி ஜமுனா (வயது 24) படையினரால் பலாலிக்குக் கூட்டிச் செல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்களும் யாழ். பொலீஸரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

ஒரு சடலம் குண்டுச் சிதறல்களால் ஏற்பட்ட காயங்களுடன் குடல் வெளியே வந்த நிலையிலும், மற்றைய சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் காணப்பட்டன.

அடையாளம் காணப்படாத மேற்படி நான்கு சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (உ-15)

## நாளை

**வைகாசி 8**

**வியாழக்கிழமை**

திதி: பூரணை
பிற்பகல் 3.07 வரை.

நட்சத்திரம்: விசாகம்
காலை 7.25 வரை.

பூரணை விரதம்
வெசாக் மறு தினம்

சுபநேரம்: 7. 22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## கப்பல்சேவை இல்லை

யாழ்ப்பாணம், மே 21

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு இன்று கப்பல் சேவை இடம்பெற மாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

அதே நேரம் — விமானத்தில் செல்ல விண்ணப்பித்தவர்களில் 375 முதல் 436 வரையான பட்டியல்களில் பெயர்கள் உள்ளோருக்கு அனுமதி கிடைத்துள்ளது என்றும் —

இப்பட்டியல்களில் உள்ளவர்கள் தமது பயணப் பதிவுகளை யாழ். சிவில் அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை —

இன்று முதல் இரண்டு நாள்களுக்கு கடும் காற்றுக் காரணமாக திருமலை — காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை இடம்பெற மாட்டாது என்று திருகோணமலை செயலக அதிகாரி தெரிவித்ததாக எமது திருகோணமலை செய்தியாளர் அறிவிக்கிறார். (உ-3-150)

## யாழ். இந்து, மகாஜனா சதுரங்கத்தில் வெற்றி!

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி, யாழ். லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இச்சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி நான்காவது தடவையாக முதலாம் இடத்தை பெற்றிருக்கின்றது.

கடந்த 15, 16, 17, ஆம் திகதிகளில் நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் 11 அணிகளும் பெண்கள் பிரிவில் ஏழு அணிகளும் பங்கு கொண்டன.

ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி 'ஏ' அணி 24.5 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், மகாஜனாக்கல்லூரி (22 புள்ளிகள்) இரண்டாம் இடத்தையும், யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி (20 புள்ளிகள்) மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் மகாஜனாக் கல்லூரி (39 புள்ளிகள்) முதல் இடத்தையும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி 'ஏ' அணி (29 புள்ளிகள்) இரண்டாம் இடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரி 'பி' அணி (26 புள்ளிகள்) மூன்றாம் இடத்தையும் பெற்றன. (உ)

## ஜெனரேட்டர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ். வை. எம். சீ. ஏ. அமைப்புக்கு 'மேர்லின்' (சர்வதேச அவசர மருத்துவ நிவாரண அமைப்பு) ஜெனரேட்டர் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற எளிய வைபபம் ஒன்றில் மேர்லின் நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜோன் ஈ. பைகேற் ஜெனரேட்டரை கையளித்தார்.

யாழ். வை. எம். சீ. ஏ. யின் தலைவரும் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமான டி. ஆர். அருமைநாயகம் அதனை சம்பிரதாய பூர்வமாக ஏற்றுக் கொண்டார். (உ-10)

## இணுவிலில் மோதல்

யாழ்ப்பாணம், மே 21

இணுவில் மேற்குப் பகுதியில் நேற்றுக் காலையும், நண்பகலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல்கள் இடம் பெற்றதாகத் தெரியவந்தது.

நேற்று முன்தினமும் அப்பகுதியில் மோதல்கள் இடம் பெற்றன.

ஆனால் சேதவிவரங்கள் சரிவரத் தெரியவரவில்லை. (உ-15)

## வயோதிப மாது படையினரின் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், மே 21

இணுவில் மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை 4 30 மணியளவில் சிறுநீர் கழிப்பதற்காக அரிக்கன் லாம்புடன் வீட்டின் விறாந்தைக் கதவைத் திறந்த கந்தசாமி இரத்தினம்மா (வயது 72) என்ற வயோதிப மாது இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே மரணமானார்.

இந்த வயோதிப மாதுவின் சடலம் சுன்னாகம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தின் மார்புப்பகுதியில் ஏராளமான சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (உ-15)

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, மே 21

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (உ-152)

## செயல்முறை பரீட்சை

இவ்வாண்டு எழுத்து மூல இறுதிப் பரீட்சைக்குத்தோற்றிய தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் செயல்முறைப் பரீட்சை நடைபெறும்.

1995ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். வலயம் 1ஐச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அன்றைய தினம் சம்பள மேலாய்வு சான்றிதழ்கள் வழங்கப்படும் என யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் நல்லூர் தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்துள்ளார் (உ)

## சீருடைத் துணி விநியோகம்

வலி. தெற்கு, மே 21

பாடசாலை மாணவருக்கு இவ்வருடத்துக்கான இலவச சீருடைத்துணி வழங்கும் வைபவம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் நேற்று முன்தினம் நடைபெற்றது. (உ-152)

## சுவிஷேச கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 21

திருகோணமலையைச் சேர்ந்த போதகர் யோண் அன்ரனி செய்தி அளிக்கும் சுவிஷேசக் கூட்டங்கள் நாளையும் நாளை மறுதினமும் மாலை 3.00 மணி முதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இக் கூட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெலிகந்தவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏ கே. எல். எம். ஜீ — ஒன்று, ரி 56-2 ரகத் துப்பாக்கி — ஒன்று மற்றும் பெரும் தொகையான ரவைகள் உட்பட பல ஆயுத தளபாடங்களைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் — விடுதலைப்புலிகள் அறிவித்தனர். (உ-3-4-21-164-150)

## வன்னியில் இரு...

(முதலாம் பக்கத் தொடர்)

சட்ட நடவடிக்கைகளுக்கு சீரான விநியோக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக வவுனியா இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

படையினர் முன்னேறி நிலை கொண்டுள்ள ஓமந்தை, நெடுங்கேணிப் பிரதேசங்களுக்கு அருகில் படைகளின் அடுத்த கட்ட நகர்வைத் தடுத்து நிறுத்தி முகம் கொடுப்பதற்காக —பதில் தாக்குதலுக்கு தயாராக— வியூகம் வகுப்பதில் புலிகள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் முன்னேறி நிலைகொண்டுள்ள பிரதேசங்களுக்குள் புலிகள் ஊடுருவித் தாக்கலாம் என படைத்தரப்பு எதிர்பார்ப்பதாகவும் —

அத்தகைய சவாலை எதிர்கொள்ள படைத்தரப்பு தயார் நிலையில் இருப்பதாகவும்—

அரசுத் தரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.


## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவிகளான

**சௌமியா, லாவண்யா**

அவர்களின் அன்புத் தந்தை

**சிவதாசர் சிவகுமார்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**'99 விஞ்ஞானப்பிரிவு மாணவிகள்**
**யா/ இந்துமகளிர் கல்லூரி**

(47077)

பெற்றோரின் கவனத்திற்கு!

## கருத்தரங்கு

"பிள்ளைகள் வளர்க்கப்படும் முறைகளும் அதன் தாக்கங்களும்"

**கருத்துரை வழங்குவோர்**

திரு. A S அகஸ்ரின்
அருட் திரு. S. J. இராஜநாயகம்

**நாள் : 21 - 05 - 1997**
**நேரம்: பி. ப. 3.00 மணி (பழைய நேரம்)**
**இடம்: "அகவொளி"**

குடும்ப வளத்துணை நிலையம்
**131, பாங்சால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இக் கருத்தரங்கில கலந்து பயன் பெற வாரீர்!

(47049) இயக்குநர்: அகவொளி


## மரண அறிவித்தல்கள்

### செல்வி அனுஷா பத்மநாதன்

சுண்டுக்குளி விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அனுஷா பத்மநாதன் 19-05-97 காலமாகிவிட்டார்.

இவர் பத்மநாதன் மனோன்மணி (ராணி) தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், அனுராஜ் (சலுசல), காந்தராஜ், கவிதா, பிரமிளா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லையா சின்னம்மாவின் பேர்த்தியும், சின்னத்துரை, பூமணி, ராஜசிங்கம், யோகராணி, செல்லத்துரை, அம்பிகா, ஸ்ரீராதா, கிருஷ்ணன், யோகேஸ்வரி ஆகியோரின பெறாமகளும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 20-05-97 அன்று நடைபெறறன என்பதனை அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. பத்மநாதன்
(தந்தை)

22/6, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

(47080)

### திருமதி அரியதுரை புவனேஸ்வரி

(அரியாலை)

14.05.97 ஆம் திகதி காலமான திருமதி அரியதுரை புவனேஸ்வரி அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.97) காலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

239, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
அரியாலை.

(47071)

**மேலும் மரண அறிவித்தல்கள்**
**2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## நாளை

யாழ்ப்பாணம், மே 21

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி (பாலர் பள்ளி) அபிவிருத்திக் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இணையத்தலைவர் சு. பரமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சர்வமத தலைவர்கள் ஆகியுரையுடன் ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் கல்விமான்கள் சிறப்புரையாற்றுவர். (உ-3-4)

## 3 இந்திய மீனவரும் விடுதலை

யாழ்ப்பாணம், மே 21

கடந்த 16 ஆம் திகதி தலைமன்னார் பகுதியில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று மீனவர்களையும் யாழ் நீதிவான் ஏ. என் இராமச்சந்திரன் நேற்று முன்தினம் விடுதலை செய்தார்.

இந்த மூன்று மீனவர்களையும் பொறுப்பேற்க இந்தியக் கடற்படையினர் காங்கேசன் துறைக் கடலுக்கு அப்பால் வந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலீஸார் யாழ் நீதிவானிடம் தெரிவித்ததை அடுத்து அவர்களை நீதிவான் விடுதலை செய்தார்.

தலைமன்னாரில் கடந்த 16 ஆம் திகதி இந்திய மீன்பிடிப் படகு மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டதும் —

மூவர் கைது செய்யப்பட்டதும் —

கைதான மூவரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதும் — தெரிந்தவையே.

இச்சம்பவம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு இலங்கை அரசிடம் நேற்று முன்தினம் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தது.

விடுவிக்கப்பட்ட மூன்று மீனவரும் நேற்று மண்டபம் பகுதிக்கு வந்து சேர்ந்ததாக இந்திய வானொலி அறிவித்தது. (உ-3-4)

## ஈழத் தமிழர் ஆதரவுப் பேரணி

சென்னை, மே 21

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பாண்டிச்சேரியில் (புதுவையில்) எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழர் பாதுகாப்புப் பேரணியும், பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதுவை மாநில ஈழமக்கள் ஆதரவு கூட்டமைப்பின் ஆதரவில் 24 கட்சிகள், அமைப்புக்கள் பங்கு பற்றும் இப்பேரணியில் பல தமிழகத் தலைவர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக பல தீர்மானங்களும் அங்கு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

## கைப்பற்றிய..

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

இவர்களை வவுனியாவுக்கு அழைத்து வந்து சேமநல நிலையங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

இதேவேளை- நெடுங்கேணியில் இருந்து பத்துப் பேர் [illegible] அழைத்து வரப்பட்டிருந்தனர். (இ-164-3)

## இரு ஜெனரேட்டர்கள் இன்று முதல் இயங்கும்

யாழ். குடாநாட்டின் மின் விநியோகத்துக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்பு செய்த ஐந்து ஜெனரேட்டர்களில் இரண்டு இன்று முதல் இயக்கப்படவிருக்கின்றன.

இந்த ஐந்து ஜெனரேட்டர்களில் நான்கு ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. ஐந்தாவது ஜெனரேட்டரை தற்போது கொழும்பில் தரித்துள்ள கப்பல் ஒன்றில் ஏற்ற ஏற்பாடுகள் நடக்கின்றன. அடுத்த வாரமளவில் அது யாழ். வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எடுத்து வரப்பட்ட நான்கு ஜெனரேட்டர்களில் ஒன்று இன்று மாலை 5.30 மணிக்கு பருத்தித்துறையிலும்—

மற்றொன்று இன்று காலை 8.30 மணிக்கு அரியாலையிலும்— சுபநேரத்தில் இயக்கி வைக்கப்படும்.

ஜெனரேட்டர்களை இயக்கி வைக்கும் ஆரம்ப வைபவங்களில் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவரும் கலந்து கொள்வார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவர் தற்சமயம் வர முடியாத காரணத்தால் அவரின்றியே வைபவத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## எழுத வாய்ப்பு

உடல் ஊனமுற்றோர் கம்பியூட்டர் உதவியுடன் எழுதுவதற்கு 'ஜரைட்' என்ற நுட்ப முறையை இந்திய தேசிய தகவல் தொழில் நுட்பக்கழகம் உருவாக்கியிருக்கிறது. (இ-3)

## அம்புலன்ஸ்கள்...

(முதாலம் பக்கத் தொடர்)

காயமுற்ற படையினரை ஏற்றிக்கொண்டு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து அம்புலன்ஸ்கள் அபாய ஒலியை எழுப்பிக்கொண்டு காலி வீதி வழியாக அடிக்கடி செல்வதைக் காணக்கூடியதாக இருப்பதாக எமது கொழும்புச் செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

காலி வீதியில் படையினரை ஏற்றிக் கொண்டு செல்லும் அம்புலன்ஸ்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கொழும்பு பெரியாஸ்பத்திரி முன் வீதி போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. (உ-3)

## பல ஆட்லறிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் மேலும் பல ஆட்லறி நிலைகளை படையினர் அமைப்பதற்கு வசதியாகவே இந்த ஆட்லறிகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதேசமயம் வவுனியவிலிருந்து புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு நேற்று பல பஸ்களில் நூற்றுக்கணக்கில் பொலீஸார் கூட்டிச் செல்லப்பட்டதையும் காணமுடிந்ததாக எமது வவுனியாச் செய்தியாளர் அறிவிக்கின்றார். (உ-164)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியரும் எமது வகுப்பாசிரியருமான

**செல்வி வனஜா இராசரட்ணம்**

அவர்களின் அருமை தந்தையார்,

**கு. இராசரட்ணம் அவர்கள்**

காலமாகிய துயரச் செய்தியை அறிந்து மிகவும் வருந்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டு- 11 B மாணவிகள்**
(47076) **சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.**

## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துரைரெட்ணம் பரமேஸ்வரி

விண்ணுலகம் போன நீ
மீண்டு வராவிட்டாலும் — எம்மனக்
கண்ணுலகில் உன்னுருவம்
வாடாமல் காட்சி தரும்,
கண்ணீர் விட்டுக் கசிந்துருகி
கண்ட மிச்சம் ஒன்றுமில்லை;
எண்ணி இன்று இருபத்திமூன்று ஆண்டுகள்
நீ எம்மை விட்டுப் போன காலம்.
மண்ணில் வாழ்வோரெல்லாம்
மாள்வதுதான் வாழ்வென்றால் - நாம்
வாழும்வரை உன் நினைவு
எம்மைவிட்டு மாறாது.

பிரிவால் துயருறும்:
மகன்: து. கண்ணன்.
மருமகள்; க. வசந்தி
பேரப்பிள்ளைகள்.

து. கண்ணன்,
சுவீற்றி இன்டஸ்ரீஸ்,
754. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(47070)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org